-----------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ("அதிகாரசபை") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இருப்பின் பெறுமதி 164.90 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட பயிற்சி உபகரணங்கள் மூலதன இருப்புக்களில் ஒதுக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இருப்பு பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல் முகாமைத்துவத்திற்காக முறையான இருப்பு முகாமைத்துவ முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படாமையினால் காலாவதியாகிச் செல்கின்ற அசைவுறுகின்ற மற்றும் அசைவுறாத இருப்புக்களை இனங்காண்பதற்கும் முடியாமல் இருந்தமையால் இந்த இருப்புக்களின் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 15 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி இருப்பு மதிப்பீட்டின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான இருப்பு முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 13 பந்திக்கு முரணாக நிர்மாண உபகரணங்கள், பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான ரூபா 12.15 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் இருப்பாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில் பயிற்சி பாடநெறி வழங்குகின்ற கல்வி நிறுவனமாக செயற்பட்டமையினால் உரிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 12.67 மில்லியன் இந்த தொகுதிக்கு உரியதாகும். | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 1.21 மில்லியன் செலவில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட Well Water Plant மூலதன செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட போதும் மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தக் கிரயம் பூர்த்தி செய்த பணிகளின் அளவில் கட்டிடம் மற்றும் பொருத்திக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன் படுத்தப்படுகின்றமையால் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வற் வரிக்காக வெளியிடப்பட்ட வருமானம் ரூபா 200.85 மில்லியன் ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வட் வரிக்காக அடிப்படையாகக் கொள்ள வேண்டிய வருமானம் 207.37 மில்லியன் ஆனமையால் ரூபா 6.52 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டுக்கான காரணம் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் வற் வரி விடுவித்தலின் கீழ் வருகின்ற கல்வி சேவைகளில் இருந்து பெறுகின்ற வருமானம் ஆகும். | வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்காக இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையினால் பத்தரமுல்ல பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற நிர்மாண உபகரணப் பயறிச்சி நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இந்த காணி தொடர்பாக முறையான வாடகை உடன்படிக்கையின் கைச்சாத்திடுவதற்காக ரூபா 54.89 மில்லியன் மற்றும் 07 சதவீத தாமத | இந்தக்காணி நீண்ட கால அடிப்படையில் எமது நிறுவனத்திற்கு கையளிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (UDA) வரிசை அமைச்சு ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நீண்டகால வாடகைக்குரிய செலுத்த வேண்டிய வாடகைப் பணம் மற்றும் அதன் அடிப்படையிலான வட்டியைக் குறைக்குமாறு | நிதிக்கூற்றுக்களில் போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வட்டியும் வழங்குமாறு 2019 ஆம் ஆண்டின் போது நகஅபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அதிகார சபையின் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் மற்றும் இந்த செலுத்த வேண்டிய பணத்திற்காக நிதிக்கூற்றுக்கள் ஏற்பாடுகள் அல்லது போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திரக்கவில்லை. | வரிமை அமைச்சு ஊடாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காண்டின் இறுதியின் போது அதிகார சபையின் நானாவித கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 4.44 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3.29 மில்லியன் நிதி மீதி பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது. | நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் தீர்த்து வைக்கப்படாத ஊழியர் இறுதிச் சம்பளக் கொடுப்பனவு மற்றும் சேமலாப நிதியத்தின் பல்வேறு நிறுவனம் சார்ந்த தேவையின் அடிப்படையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எழுந்திருந்த போதும் தற்போது இதுவரை தீர்த்து வைக்கப்படாத பெறுமதியில் உள்ளடங்கியுள்ளது. | கடன்கொடுத்தோர் மீதியை கால ரீதியில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 முற்பணம் பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 0.24 மில்லியன் முற்பண மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது முற்பணத்தை மீள பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானகளுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமானம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 71(i)ஏ | அதிகார சபையினால் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 6.05 மில்லியன் ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. | குறித்துரைத்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் படிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 0.13 மில்லியன் பெறுமதியான முற்பணம் மற்றும் ரூபா 2.06 மில்லியன் ஆன பயிற்சி முற்பணம் என்பன தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை விரைவாக தீர்த்து வைப்பதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான 12 திடீர் விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை கணக்காய்வு திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் இதனை சரியாக அறிக்கையிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 | மூன்று உத்தியோகத்தர்களால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினை விஞ்சி எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அற்காக அதிகார சபையால் மேலதிகமாக செலவிடப்பட்ட ரூபா 1.19 மில்லியன் தொகை இதுவரை அறவிடப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை வழங்குதல் மற்றும் மாதாந்த எரிபொருள் படியை சம்பளத்துடன் சேர்த்து செலுத்துதல் 2022.03.01 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த வாகனங்களுக்காக எரிபொருள் வழங்குதல் | எரிபொருள் எல்லையில் எரிபொருளைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளகக் கட்டுபாட்டை விருத்தி செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குழாம் வாகனங்களுக்கு வழங்கப்படுகின்ற முறையில் கட்டளையிடல் முறையில் நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் பணிபாளர் நாயகம், பணிப்பாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் குழாம் வாகனங்களைப் போன்று பொது கடமைகளுக்காகவும் ஈடுபடுத்ததுதல் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை எழுதுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிறுவனத்தின் தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட இரண்டு வாகனங்களுக்காகவும் எரிபொருள் இந்த முறையிலேயே வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சுற்றறிக்கை அமுலாகின்ற 2015.06.01 ஆந் திகதி முதல் 2018.12.31 வரையான காலத்தின் போதும் அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் நிதிப்பிரமாணம் 756(6) | ஒரு நிதி ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் இருப்பு விடயங்களின் பௌதீக இருப்பினை உறுதிப்படுத்துவதற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் இறுதி மெய்மையாய்வு அறிக்கை அடுத்து வரும் நிதியாண்டில் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு | அதிகாரசபைக்குரிய நிர்மாண இயந்திர உபகரணப் பயிற்சி நிலையத்தில் இறுதி இருப்புக்களுக்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் அந்தப் பணிகளை விரைவாக நிறைவேற்றுவதங்கு நடவடிக்கை | சகல பொருட்கள் தொடர்பாகவும் மெய்மையாய்வினை மேற்கொண்டு உரிய இறுதி மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படும். | |
| (ஈ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் PED/01/2020 என்ற நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கையி ன் 06 ஆம் பந்தி | ஒவ்வொரு சேவைகளுக்காகவும் எடுக்கின்ற காலம் மற்றும் கட்டணங்களைக் காண்பித்து பிரஜைகள் விஞ்ஞாபனம் தயாரித்து அலுவலக கட்டிடத்தில் மற்றும் இணைய தளத்தில் பொது மக்களுக்கு / வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தல் வேண்டும். எனினும் அதிகார சபையால் 2024 ஏப்ரல் 05 ஆம் திகதி வரையிலும் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிரஜைகள் விஞ்ஞாபனம் 2023.11.22 ஆந் திகதி முதல் நிறுவனத்தின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் இறுவெட்டுப் பிரதி ஒன்று நிறுவனத்தில் வரவேற்கும் கருமபீடத்தில் மற்றும் தகவல் நிலையத்தில் (Information Centre) மக்களின் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான சகல தகவல்களையும் உள்ளடக்கி பிரஜைகள் விஞ்ஞாபனத்தில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கொம்ட்ரோலர் ஜனரலின் 2022 செப்தெம்பர் 09 ஆந் திகதிய இலக்கம் 10/2022 மற்றும் 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய இலக்கம் 05/2020 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | ஓட்ட நிலைமையில் காணப்படாத மற்றும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமற்ற வாகனங்களை விற்றுத் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் கிரயம் ரூபா 3.10 மில்லியன் ஆன 03 வாகனங்கள் ஆன இலக்கம் GB-9123 , 61-4630 மற்றும் 61–4631 என்ற வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | GB-9123 என்ற வாகனத்தை விற்பனை செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அந்த சந்தர்ப்பத்தின் போது கொள்வனவாளர் முன்வரவில்லை. இலக்கம் 61-4630 மற்றும் 61–4631 என்ற இரண்டு வாகனங்களின் உரித்து காணப்படாமையினால் அவற்றின் உரித்தை கையேற்கமாறு இலக்கம் 1/4/1/17/2 என்ற 2023.09.22 ஆம் திகதிய கடிதத்தில் வரிசை அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 38 ஆவது மேலதிகம் | | | |
| (i) | 2.14.1 ஆம் பந்தி | ரூபா 5 இலட்சத்தை விஞ்சுகின்ற பழுதுபார்த்தல் செலவினங்களுக்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | பழுது பார்த்தல் ரூபா 0.5 மில்லியனை விஞ்சும் போது CAO இன் பிரத்யேக அங்கீகாரம் உரியவாறு வழிகாட்டியின் பிரகாரம் பெறப்படுகின்றது. | ரூபா 05 இலட்சத்தை விஞ்சுகின்ற சகல பழுது பாரத்தல் செலவினங்களுக்காகவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | 5.4.8(ஆ) | செயலாற்றல் காப்புறுதி வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியில் 28 நாட்கள் வரை செல்லுபடியாக வேண்டியிருந்த போதிலும் சௌசிறிபாய கட்டித்தில் மாடிகளைப் பழுது பார்க்கும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் 2023 யூன் 27 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்த போதிலும் பெறப்பட்டிருந்த செயலாற்றல் காப்புறுதி காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணத்திற்காக மேலதிக வேலைப் பகுதிக்கு ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தமையால் அதற்கான காலம் எடுத்ததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட திகதியினை விட 27 நாட்களினால் மாற்றமடைந்திருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். | செயலாற்றல் காப்புறுதி வேலைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கு 28 நாட்கள் வரை செல்லுபடியாகி இருத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பிரதான அலுவலகத்தல் இலங்கை வங்கியின் டொறின்டன் கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் சராசரியாக ரூபா 242.70 மில்லியன் காசு மீதி கடந்த 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதிகர சபையின் தொழிற்படு மூலதனத் தேவையினை விஞ்சியிருந்த மேலதிக பணத்தை உபாய வழிகளில் குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி | நலன்களை அதிகரிப்பதற்காக மேலதிக நிதியை முகாமைத்துவம் செய்தல் முக்கியத்துவமாக என்பதால் இனங்காணப்படும். | மேலதிக பணத்தை உபாய வழிகளில் முகாமைத்துவம் செய்து குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த வட்டி வருமானம் இதன் காரணமாக இழக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 26.88 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 43.15 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 70.03 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது NVQ பயற்சி பாடநெறி வருமானம் உயர்வடைந்து சென்றமை, ஒப்பந்தகாரர்களின் பதிவு வருமானம் உயர்வடைந்து சென்றமை, பயிற்சி பாடநெறி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 மூலதன வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| விபரம் | நடப்பாண்டின் வருமான மீதி (ரூபா) | கடந்த ஆண்டின் மீதி (ரூபா) | வேறுபாடு சாதகம் / (பாதகம்) (ரூபா) | வேறுபாடு (%) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| பதிவு செய்தல் வருமானம் | 160,922,440 | 139,858,225 | 21,064,215 | 15 |
| பயிற்சிப் பாடநெறி வருமானம் | 32,872,385 | 25,162,899 | 7,709,486 | 31 |
| இயந்திர பொறிமுறை வாடகை வருமானம் | 2,194,502 | 1,058,460 | 1,136,042 | 107 |
| வெளியீடுகள் விற்பனை | 5,308,202 | 3,738,821 | 1,569,381 | 42 |
| மாநாட்டுக் கட்டணங்கள் | 8,779,978 | 5,729,100 | 3,050,878 | 53 |
| வட்டி வருமானம் (நிலையான வைப்பு) | 31,153,373 | 15,069,798 | 16,083,575 | 107 |
| கேட்போர்கூடம் மற்றும் மாநாட்டு மண்டப வாடகை வருமானம் | 10,422,990 | 6,483,941 | 3,939,049 | 61 |
| NVQ பயற்சி பாடநெறி வருமானம் | 55,863,603 | 12,233,000 | 43,630,603 | 357 |
| **செலவினம்** | | | | |
| எரிபொருள் படி | 3,339,524 | 3,227,366 | (112,158) | (3) |
| மிகை ஊதிய படி செலுத்துதல் | 6,048,836 | 5,770,144 | (278,692) | (5) |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 4,346,772 | 3,720,280 | (626,492) | (17) |
| வாகனப் பராமரிப்பு | 7,288,045 | 4,033,805 | (3,254,240) | (81) |
| இயந்திர உபகரணங்கள் பராமரிப்பு | 1,811,908 | 165,780 | (1,646,128) | (993) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமையின் படிப்படியாகக் குறைந்து செல்வதற்கு ஆரம்பித்ததன் காரணமாக அதிகாரசபையின் பிரதான வருமானமான

ஒப்பந்தகாரரின் பதிவு செய்தல் வருமானம் 15 சதவீதத்தாலும், இயந்திர பொறிமுறைகளை வாடகைக்கு வழங்குதலின் வருமானம் 107 சதவீதம் மற்றும் வெளியீடுகள் விற்பனை வருமானம் 42 சதவீதத்தாலும் மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்தது.

(ஆ) மேலும் பயிற்சி பாடநெறி வருமானம் மற்றும் வட்டி வருமானங்களும் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவவில் அதிகரிப்பொன்று கணக்காய்வின் போது ஒட்டுமொத்தமாக அவதானிக்கப்பட்டது.

(இ) அலுவலக உபகரணங்கள், வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்களை பராமரித்தல் செலவினம் மீளாய்வாண்டின் போது ஒட்டுமொத்தமாக 70 சதவீதத்தால் அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| **விகிதம்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2023** | **2022** |
| **திரவ விகிதம்** | **தடவைகளின் எண்ணிக்கை** | **தடவைகளின் எண்ணிக்கை** |
| நடைமுறை விகிதம் | 3.20:1 | 2.75: 1 |
| விரைவு விகிதம் | 2.39:1 | 2.11: 1 |
| **இலாப விகிதம்** | **சதவீத்தில்** | **சதவீத்தில்** |
| சொத்துக்களின் அடிப்படையில் நலன்கள் | 2.08 | (3.17) |

அதிகாரசபையின் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் அதிகரித்திருந்தது. நாட்டில் காணப்பட்ட சிக்கலான பொருளாதார நிலைமை படிப்படியாக மீண்டு வந்ததன் காரணமாக அதிகாரசபையின் வருமானம் அதிகரித்ததன் அடிப்படையில் இலாப பங்களிப்பு அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் தவறுகோல் மண்டபத்திற்கு உரியதாக இருந்ததுடன் ரூபா 6.00 மில்லியன் வாடகையில் 30 வருட வாடகை உடன்படிக்கையில் 1986 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த வாடகை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னர் 2016 ஆம் ஆண்டு முதல் மீண்டும் 30 வருட காலத்திற்காக காணியைப் பயன்படுத்துவதற்கு வாடகை மீண்டும் மதிப்பீடு செய்யப்படாமல் 2019 ஆம் ஆண்டின் போது புதிய | இது தொடர்பாக முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கௌரவ சட்டமாதிபரின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் போது இது தொடர்பாக அமைச்சரவைக்கு அனுப்பி தீர்மானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனை பெறப்பட்டிருந்தது. அந்த ஆலோசனையின் பிரகாரம் அமைச்சரவை பத்திரம் ஒன்றின் வரைவு ஒன்று வரிசை அமைச்சு | நிர்மாண உபகரண பயிற்சி நிலையத்திற்காக முறையான வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.
பிரதமரின் செயலாளரால் 2023 திசெம்பர் 07 ஆந் திகதிய கடிதம் மூலம் காணப்பட்ட வாடகைப் பெறுமதிக்கு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்த முறையற்ற மற்றும் கட்டுப்பாட்டு நிர்வாக சபை அங்கீகாரம் கிடைக்காத வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்து அரசாங்கத்தின் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு வாடகைப் பெறுமதியின் பிரகாரம் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ அல்லது சௌசிறிபாய வளவில் இருந்து விலகி அதிகார சபைக்குரிய பத்தரமுல்ல பிரதேசத்தில் காணப்படுகின்ற கட்டிடத் தொகுதியில் அலுவலகத்தை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு துறை அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்ப்பட்டிருந்தது.
அதன் பிரகாரம் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023 திசெம்பர் 19 ஆந் திகதிய இலக்கம் MUDH/HC/AD/178/7 என்ற கடிதம் மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரால் பத்தரமுல்லையில் அதிகார சபைக்குரிய நிர்மாண உபகரணப் பயிற்சி நிலையம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அதிகார சபையை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.
நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் அமைந்துள்ள கட்டிடத்துடன் காணி தொடர்பாகவும் முறையான வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக தேவையான ஏற்பாடுகளும் இல்லாமையினால் இந்த நிலைமை தீர்த்து வைக்கப்படாமல் இந்த நிலையத்தில் அதிகார சபை ஸ்தாபித்தல் சர்ச்சைக்குரிய செயலாளருக்கு அனுப்புவதற்கு அதிகார சட்டப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கல்குளத்தில் அமைந்துள்ள அதிகார சபையின் செயற்பாட்டு பயிலுனர் பயிற்சிப் பாடசாலை (OTC) மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணிக்காக இதுவரை குறித்துரைத்த வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டு பயிலுனர் பயிற்சி பாடசாலை (OTC) அமைந்துள் காணி அரசாங்கத்தின் காணியாக இருந்ததுடன் இந்தக் காணியை நீண்ட கால வாடகை அடிப்படையில் எமது நிறுவனத்திற்குக் கையளிக்குமாறு திறப்பனை பிரதேச செயலகத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் பெயரளவு வாடகைப் பெறுமதியின் கீழ் எமது நிறுவனத்திற்கு நீண்டகால வாடகை அடிப்படையில் கையளிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கல்குளம் செயற்பாட்டு பயிலுனர் பயிற்சி பாடசாலையில் உட்கட்மைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த தொகையில் முறையே ரூபா 2.84 மில்லியன், ரூபா 4.91 மில்லியன் மற்றும் 0.30 மில்லியன் தொகையும், மென்பொருள் அபிவிருத்திக்காக 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 1.33 மில்லியன், பயிலுனர் அடையாள அட்டை வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட தொகையில் ரூபா 13.82 மில்லியன் தொகை என்பன கணக்காய்வுத் திகதி வரையிலும் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட முன்மொழிவு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது எஞ்சியிருந்த மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைப்பகுதிகளில் உரியவாறு பூர்த்தி செய்வதற்கு சகல நடவடிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது சேமிக்கப்பட்ட பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் பணிகளை நாடு முழுவதும் பரவலாக்குவதற்காக 15 மாவட்ட இணைப்பு அலுவலகங்கள் | மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களுக்காக ஒரு மாதத்தில் | பிரதேச அலுவலகங்களில் செயலாற்றலை கால |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அலுவலகங்களில் அடையப்பட வேண்டிய இலக்குகள் , அடையப்பட வேண்டிய காலம் மற்றும் செயலாற்றல் குறிகாட்டிகள் குறித்துரைத்தவாறு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமான பிரதேச அலுவலகங்களின் செயலாற்றலைப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போது அதிகார சபையின் கேகாலை மாவட்ட இணைப்பு அலுவலகத்தின் செயலாற்றல் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும் இந்த பிரதேச அலுவலகங்களின் மூலம் ஆற்றப்படுகின்ற சகல பணிகளும் இணைய வழி மூலம் மேற்கொள்வதற்கு முடியுமாகக் காணப்படுகின்றதாகக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக அதிகார சபையால் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொள்ள வேண்டிய இலக்குகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்கள் நிறுவனத்தின் பிரதான மூன்று பிரிவுகளான அபிவிருத்தி, கைத்தொழில் சேவை மற்றும் நிர்மாணப் பயிற்சியின் கீழ் அந்தந்த உரிய பணிகளில் ஈடுபடுகின்றனர். அந்த பணிகளுக்குரிய மாதாந்த செயல் முன்னேற்றம் மாதாந்த கூகுல் பத்திரம் நாளது வரையாக்கப்படுவதுடன் தேவையான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சகல மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களதும் செயல் முன்னேற்றத்தை அதனூடாக அவதானிக்க முடியும். | ரீதியில் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | சட்டத்தின் V ஆம் பகுதியின் 33(i) பிரிவின் பிரகாரம் எந்த ஒரு இனங்காணப்பட்ட நிர்மாண வேலை வசதிகளும் பெற்ற நபர் ஒருவராக வெளிநாட்டு ஆலோசனையாளர் தொடர்பாக பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அந்த நபருக்கு தற்காலிக பதிவிற்காக அதிகார சபைக்கு விண்ணப்பிக்க வேண்டி இருந்ததுடன் அதில் இரண்டாவது பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு வெளிநாட்டு ஆலோசனையாளரும் | இது தொடர்பாக கூட்டு ஆதன குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 2023 மே மாதத்தின் போது சட்ட வரைவு வழங்கலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது சட்ட வரைவு வழங்கல் தொடர்பாக எடுக்கப்பட்டிருந்த போதும் இது தற்போதும் | நிர்மானக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கையில் இனங்காணப்பட்ட நிர்மாண வேலைகளில் ஈடுபடுவதற்கு முன் அதிகாரச சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்ததுடன் பதிவு செய்யும் செயற்பாட்டு நடைமுறை குறித்துரைத்த ரீதியில் பெறப்படுகின்ற பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் 3 ஆவது பிரிவின் பிரகாரம் அவ்வாறு பதிவு செய்யாமல் வேலை நடவடிக்கைகளில் நபர் ஒருவர் இந்த சட்டத்தின் கீழ் குற்றமளித்தவர் ஆகும். இது தொடர்பாக அதிகார சபையினால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | சட்டத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சட்ட விதிகளின் மூலம் குறித்துரைக்கப்படுகின்ற பெறவேண்டிய முறை நிர்மாண பொருட்கள் இறக்குமதியாளர், உற்பத்தியாளர் மற்றும் துணைப் பாகங்கள் வழங்குபவர்களின் பெயர் வழிக் கோவை ஒன்று அதிகார சபையினால் பேணிச் செல்லப்படல் வேண்டும். சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற விதிகளின் மூலம் குறித்துரைக்கப்படுகின்ற பெறவேண்டி இருந்த முறை தற்போது காணப்படுகின்ற கனரக நிர்மாண இயந்திர உபகரணம் மற்றும் உபகரணங்களின் பெயர் வழிக் கோவை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட பெயர் வழிக் கோவையின் அலுவலக நேரத்தின் போது செலுத்தப்படாமல் எந்த ஒரு நபரினாலும் பரீட்சிப்பதற்காக வழங்கப்படல் வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதிகார சபையினால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய வர்த்தமானிப் பத்திரம் 2336/46 என்ற இலக்கத்தின் கீழ் 2023.06.14 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன். 2023.10.05 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலின் மூலம் வழங்குனரின் பதிவு செய்தலின் நலன்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தகைமை பெற்ற வழங்குனர்களுக்காக உள்ளடக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தெளிவாக்கப்பட்டு பயனர்களுக்கு சாதகமாக பதிவு விண்ணப்பங்களை நிரப்புவதுடன் அமுல்படுத்தப்பட்டிருந்தது. மூலப் பொருள் வழங்குனர்களின் பதிவு தொடர்பாக வழிகாட்டி ஆலோசனை ஒன்று அச்சிடப்பட்டுள்ளது. ஆரம்ப மூலப்பொருள் நிரல் ஒன்று தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சட்டத்தின் 51(2) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் நுட்ப பிணக்குகளை தீர்த்து வைக்கும் நடைமுறை ஒன்றை தீர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் இது வரை பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்குரிய செயல் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைத்தல் (Adjudication) தொடர்பான நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2017.11.28 ஆந் திகதி அமைச்சிற்கும் சட்ட வரைவு வழங்கலுக்கும் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அவ்வப்போது திருத்தங்கள் மேற்கொண்டு சமர்ப்பிக்கப்படுகின்றது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | சட்டத்தின் X ஆவது பகுதியின் 53 பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் அமைச்சரால் அதிகார சபையில் பரிந்துரையின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்ற 7 பேர்களுக்கு அதிகரிக்காத அங்கத்தவர்களின் எண்ணிக்கையுடன் மேன்முறையீட்டு சபை ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். மேன்முறையீட்டு சபையின் சகல அங்கத்தவர்களும் நிர்மானத் துறையில் 20 வருடங்களுக்கு குறையாத அனுபவத்துடன் உள்ள நபர்களாக இருத்தல் வேண்டும். இது வரை இந்த மேன் முறையீட்டு சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுதற்காக அமைச்சரின் அங்கீகாரம் இதுவரை வழங்கப்படாதிருந்தமையினால் இந்த சபையை நியமிக்க முடியாதிருந்தது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | சட்டத்தின் XI ஆவது பகுதியின் 55 ஆவது பிரிவின் பிரகாரம் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் தேவையான தரப்பினருக்காக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தகவல் செயலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதன் இலக்குகள் மற்றும் பணி நடைமுறைகள் செயலாற்றல் நியமம் பரிந்துரைக்கப்படல் வேண்டும். எனினும் அதிகார சபையால் தகவல் முறைமை ஒன்று இதுவரை அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல் செயலகம் ஒன்று ஸ்தாபிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை வழங்குவதற்காக 2023.07.26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய நிர்மான வேலைகள் தொடர்பான அறிக்கை மற்றும் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களை ஒழுங்கு செய்வதற்கான உரித்தான அறிக்கையும் தயாரிக்கப்படுகின்றது. | மேற்படி |
| (vi) | சட்டத்தின் III ஆம் பகுதியின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் இலக்குகளின் கீழ் | கனரக நிர்மாண இயந்திரங்கள், உபகரணங்களின் | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டுள்ள இந்தப் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. நாட்டில் தற்போது காணப்படுகின்ற குறிப்பாக குறிப்பிடப்படுகின்ற கனரக நிர்மானப் பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பெயர் வழிக் கோவை ஒன்றைப் பேணிச் செல்லல், ஏனைய நாடுகளின் நிர்மாண நடவடிக்கைகளைக் கையேற்கின்ற உள்நாட்டு ரீதியில் பதிவு செய்தல் ஒப்பந்தகாரர்களை மேம்படுத்துதல் மற்றும் நலன்புரி, சுற்றாடலுக்குச் சாதகமான, பொருத்தமான, கிரயக் குறைந்த மற்றும் மலிவான புதிய தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துதல் மற்றும் பரவலாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் முறைமைப்படுத்துதல், நிர்மாணக் கைத்தொழிலில் ஏதாவது பொருட்கள், பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் தேவையினை மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், நிர்மாண வேலைகளின் போது உள்நாட்டு உற்பத்தியினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், நிர்மாணக் கைத்தொழிலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளை கையேற்றல். | பெயர்வழிக் கோவை ஒன்று பேணிச் செல்வது தொடர்பாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டம் (பிரிவு இலக்கம் 44) இன் பிரகாரம் நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான தரவு களஞ்சியம் / பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்களைப் பதிவு செய்யும் சட்டம் 2019 மார்ச் 28 ஆந் திகதிய 2116/49 என்ற அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் பொது மக்களின் வாசிப்பிற்காக அதிகார சபையின் இணையதளம் ஊடாக வெளியிடப்பட்டுள்ள இந்த இலத்திரணியல் பெயர் வழிக் கோவையை நாளதுவரையாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | சட்டத்தின் VIII ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவின் பிரகரம் அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவனங்கள் (Standard Biding Documents) தயாரிக்கப்படல் வேண்டும். மேலும் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் 2014 இன் 33 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த கேள்வி ஆவனங்களின் பெறுகை வேலைகள் (SBD-01) மற்றும் | 2024 இல் மேற்கூறப்பட்ட ஆவனங்களுக்கு உரிய திருத்தங்களை மேற்கொண்டு உரிய செயல் நடைமுறை ஒன்றின் மூலம் நிர்மாணத் துறைக்கு விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பணிகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெறுகை வேலைகள் சிறிய (SBD-03) கால ரீதியில் அதிகார சபைக்கு கையளிப்பதுடன் இது வரை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி ஆவனங்கள் 02 (பெறுகைகள் - வேலை – Major - SBD-02) மற்றும் SBD-04 (Design and Build) நாளது வரையாக்குவதற்குரிய வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவனங்கள் 2021 யூலை 27 ஆந் திகதி திறைசேரியின் அரச நிதி திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2023 ஒக்தோபர் 03 ஆந் திகதி பகிரங்க அறிவித்தல் மூலம் பரிசோதனை மட்டத்தில் ஒரு வருட காலம் அமுல்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இந்த நியம ஆவணங்களை அமுல்படுத்துதல் குறித்துரைத்த காரணம் இன்றி தாமதம் அடைந்து காணப்பட்டது. ஆலோசனை சேவை தொடர்பான நியம ஆவனங்கள் (Standard Biding Documents for Consultancy) இறுதித் தடவையாக 2002 ஆகஸ்ட் மாதமே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அத் திகதியில் இருந்து கணக்காய்வுத் திகதி வரையும் இந்த ஆவணங்களை நாளது வரையாக்குவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பயிலுனர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த நிதியில் இருந்து கணக்காண்டு ஆரம்பம் வரையில் ரூபா 48.29 மில்லியன் மீதி காணப்பட்டது. கணக்காண்டின் இறுதியின் போது ரூபா 13.15 மில்லியன் மீதி | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டை செலவிடும் போது அங்கீகரிக்கப்பட்ட செலவினத் தொகுதியின் கீழ் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் இந்த நிகழ்ச்சித் | இலக்கிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கோ அல்லது சேமிக்கப்பட்ட பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காண்டின் இறுதியின் போது ரூபா 35.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுன் அதில் ரூபா 13.25 மில்லியன் செலுத்த வேண்டிய பயிற்சி பாட நெறிப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது இந்த செயல் திட்டம் அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் பயிற்சி பிரிவின் நிர்வாக செலவினத்திற்காக ரூபா 21.89 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | திட்டம் நாட்டில் காணப்பட்ட கஸ்டமான நிலைகளுக்கு இடையே தாமதமாகி பூர்த்தி செய்யப்பட்டமையினால் அதற்குரிய நிர்வாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் தாமதம் அடைந்தமையால் அதற்குரிய செலவினங்கள் இந்த காலப் பகுதியின் போது அதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | வேண்டும். |
| (எ) நிர்மாணத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற சகல பயிலுனர்களுக்காகவும் பயிலுனர் அடையாள அட்டை வழங்குவதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 35.7 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அதற்குரிய தகவல் தொழில் நுட்ப முறைமை ஒன்று ஸ்தாபிப்பதற்காக 2022 மார்ச் 11 ஆந் திகதி இலங்கை டெலிக்கொம் நிறுவனத்திற்கு ரூபா 3.35 மில்லின் ஒப்பந்தம் ஒன்று கையளிக்கப்படடிருந்தது.<br>அதற்குரிய முறைமை அபிவிருத்தி நடவடிக்கைகள் 21 நாட்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் செயற் திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக பொதுத் திறைசேரியில் இருந்து முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் திறன் பயிலுனர்களுக்காக அடையாள அட்டை விநியோகிப்பதற்கு முன்னர் அதற்குரிய விதிகள், கட்டணங்கள் வர்த்தமாணியில் பிரசுரித்து அதன் பின்னர் உரிய கட்டணத்தை அறவிடல் சட்ட ரீதியான | தகவல் தொழில் நுட்ப முறைமையினைத் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதனை பிரயோக ரீதியில் பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகள் மற்றும் அதன் போது எழுகின்ற பிரச்சனைகளுக்காக தேவையான சரி செய்தல்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. இதனைச் சரி செய்ததன் பின்னர் எதிர் வரும் இரண்டு வாரங்களின் போது இந்த முறைமை முழுமையாக CIDA நிறுவனத்திற்கு கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | திறன் பயிலுனர்களுக்காக அடையாள அட்டை விநியோகிப்பதற்காக உரிய விதிகள் மற்றும் கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையாக இருந்த போதிலும் அதிகார சபையால் இது வரை அதற்குரிய விதிகள் மற்றும் கட்டணங்களை வர்த்தமாணியில் பிரசுரிக்காமல் இதற்காக விண்ணப்பங்கள் கோரி அவர்களிடம் கட்டணங்கள் அறிவடப்பட்டிருந்தது. இவ்வாறு கட்டணங்கள் அறவிட்டு 2023 யூலை 31 ஆந் திகதி வரையில் 228 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | பத்தரமுல்லை வீடமைப்புத் திட்டம் மற்றும் கட்டிட நிலையத்தின் பார நெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களின் விடுதி வசதிகளுக்காக 08 அறைகளை உடைய விடுதி வசதி ஒன்று காணப்படுகின்றது. இந்த விடுதியில் தங்கும் வசதிகளை பயன்படுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இந்த விடுதியின் பிரதான நோக்கம் பயிற்சி பாட நெறிகளுக்காக தூரப் பிரதேசங்களில் இருந்து வருகை தருகின்ற மாணவர்களின் விடுதி வசதிகளை வழங்குவதாக இருந்த போதிலும் அந்த பிரதான நோக்கத்திற்கு முரணாக அதிகார சபையின் பதவியணியினர் மற்றும் வரிசை அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. | மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் மாணவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் CHPB நிறுவனத்திற்கு அண்மையில் அமைந்துள்ள எமது இணைந்த நிறுவனமான CETRAC நிறுவனத்தில் தங்கும் இட வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விடுதி வசதிகள் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | விடுதியின் ஒரு அறையில் நான்கு மாணவர்களுக்கு சமமான பிரகாரம் விடுதி வசதிகள் வழங்குவதற்காக போதியளவாக இருந்த போதிலும் ஒதுக்கப்பட்டுள்ள சில அறைகளில் 10 மாணவர்கள் மற்றும் 11 மாணவர்கள் ஆக விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம் மாணவர்களுக்கு கல்வி சார் நடவடிக்கைகளுக்காக பொருத்தமான சூழல் ஒன்று காணப்படாது இருந்தமை கணக்காய்வின் போது | மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் மாணவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் CHPB நிறுவனத்திற்கு அண்மையில் அமைந்துள்ள எமது இணைந்த நிறுவனமான CETRAC நிறுவனத்தில் தங்கும் இட வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாணவர்களுக்காக போதியளவான அறை வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (iii) | விடுதி வசதிகளைப் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 5,000 அறிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இந்தத் தொகை காணப்படுகின்ற செலவினப் பகுப்பாய்வின் போது சிக்கன வாடகையாக இல்லாதிருந்தமை மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மூவரிடம் இருந்து அந்தப் பணம் அறவிடப்படாமல் இருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | CIDA நிறுவனத்தினது, அமைச்சு பதவியணியினருக்கும் வழங்கப்பட்டிருந்த அறைகளுக்காக ஒருவரிடம் இருந்து ரூபா 5,000 மாதாந்த வாடகை ஒன்று அறவிடுவதற்கு 2023.06.19 ஆந் திகதிய நினைவுப் பத்திரத்தின் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரை மற்றும் தலைவரின் அங்கீகாரத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | வாடகை அறிவிடப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பொருளாதார ரீதியில் போதியளவான வாடகை அறவிடப்படல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் கூரையைப் பழுதுபார்த்தல். | | |
| (i) | அதிகாரசபையின் பிரதான அலுவலகத்தின் கூரையைப் பழுது பார்த்தலுக்காக ரூபா 5.59 மில்லியன் திருத்தப்பட்ட பொறியலாளர் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மதிப்பீடு அதற்குரிய பொறுப்பு வாய்ந்த பொறியியளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தப் பணிகளுக்கு உரியதாக நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் பொருத்தமான ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்து சரியான மேற்பார்வையுடன் நிறைவேற்றுவதற்கு செயற்படாமையின் காரணமாக கூரையின் சில இடங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்தப் பழுது பார்த்தல் நடவடிக்கைகளுக்குரிய பொறியலாளர் மதிப்பீடு மற்றும் பெறுகை ஆவணங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் பொறியியளாளருக்கு மேற்கொள்ள முடியாதிருந்தமையால் இந்த பழுது பார்த்தலின் மேற்பார்வை நடவடிக்கைகள் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இன்னுமொரு மிகவும் தகமை உடைய பொறியியல் உதவியாளர் (சிவில்) உத்தியோகத்தரிடம் இருந்து நிறைவேற்ற வேண்டியிருந்தது. பழுது பார்க்கப்பட்ட பின் சில இடங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டிருந்தமையால் | அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீடு ஒன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் கூறு விலைகள் கோருவதற்கும், பொருத்தமான ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீண்டும் அவருக்கு இது தொடர்பாக அறிவித்து தற்போது நல்ல நிலைக்கு கொண்டு வரப்பட்டதுடன் இதன் பின்னர் காணப்படுகின்ற அதிக மழையினால் மீண்டும் சில இடங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டமையினால் அந்த இடங்களும் மீண்டும் பழுது பார்க்குமாறு தற்போது அந்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| ii. | 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் கேள்வி திறக்கும் நேரம், நேரம் போன்ற மேலதிக (உரித்தான பிரகாரம்) கேள்வி அறிவித்தலில் கூறுவிலை மற்றும் கேள்வி காப்புறுதியுடன் இல்லாதிருந்தமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் குறிப்பிடப்பட்ட ஏனைய விசேட அடையாளங்கள் எதுவும் அந்த கேள்வி ஆவணங்கள் திறக்கும் குறிப்புக்களில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பான அவதானிப்புக்கள் கேள்வி திறத்தல் குறிப்புக்களில் (minutes) உரிய பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | கேள்வி திறக்கப்படுமகின்ற சந்தர்ப்பத்தின் போது கேள்வி ஆவனங்கள் பூரணப்படுத்த வேண்டியிருந்தமைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் ஒன்றாக இருந்த போதிலும் இந்த செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு / நிதிப் பிரிவு மற்றும் வழங்கல் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உத்தியோகத்தர்கள் குழுவினால் கேள்வி திறக்கப்பட்டு பரீட்சித்து கேள்வி திறத்தல் ஆவணத்தில் கையொப்பம் இடப்பட்டிருந்தது. | கேள்வி வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் கேள்வி திறத்தல் குறிப்புக்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (iii) | ரூபா 5.59 மில்லியனுக்கு தயாரிக்கப்பட்ட பொறியிலாளர் மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்ட பின்பக்க சுவரில் வேலை விடயத்தில் டீ 6, டீ 7 மற்றும் டீ 8 என ரூபா 1.32 மில்லியன் ஆன 03 விடயங்கள் அகற்றப்பட்டு ஒப்பந்தகாரரால் ரூபா 5.59 மில்லியனுடன் இணங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஏற்பாடுகள் முகாமைத்துவம் செய்வதன் தேவையின் அடிப்படையில் டீ 6, டீ 7, மற்றும் டீ 8 என்ற விடயங்கள் அகற்றப்பட்டுள்ளது. | பொறியலாளர் மதிப்பீடு மற்றும் திட்டத்தின் பிரகாரம் வேலை விடயங்களை மேற்கொண்டு ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | அதிகார சபை தயாரித்திருந்த மதிப்பீடு மற்றும் ஒப்பந்தகாரருடன் இணங்கிய கூறுவிலைகளை ஒப்பீடு செய்யும் போது ஒப்பந்தகாரரால் 13 வேலை விடயங்களுக்காக 20 சதவீதம் முதல் 474 சதவீதம் வரையிலான வீச்சில் விலை வீதம் அதிகரிக்கப்பட்டுக் காணப்பட்டது. | கேள்வி மதிப்பீட்டின் போது ஒரே ஒப்பந்தகாரர் மாத்திரம் இருந்தமையினால் விடயத்திற்கு விடயம் விலைகள் பகுப்பாய்வு செய்யப்படாது இருந்ததுடன் ஆரம்ப மதிப்பீட்டில் வேலை பூர்த்தி செய்ய முடியுமான அளவிற்கு குறைத்துக் கொள்ளல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட கூறுவிலை மற்றும் ஒப்பந்தகாரர் இணங்கிய கூறுவிலை வீதத்தில் அசாதரண நிலைமையைப் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். |
| (v) | அதிகார சபை தயாரித்திருந்த மதிப்பீடு மற்றும் ஒப்பந்தகாரர் இணங்கிய அலகு கணிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது 04 வேலை விடயங்களில் அலகின் அளவு குறைக்கப்பட்டு ஒப்பந்தகாரர் சமர்ப்பித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்து கொள்ள வேண்டிய தேவையின் அடிப்படையில் சில விடயங்களில் வேலை அளவு குறைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் வேலை விடயத்தில் அலகுகளின் அளவு பூர்த்தி செய்து முழுமையாக ஒப்பந்தகாரர் மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (vi) | ஒப்பந்தகாரரார் ஆரம்பத்தில் இணங்கப்பட்ட கூறுவிலை மற்றும் ஒப்பந்தகாரரால் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட 3 ஆவது பட்டியலுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த பழுது பார்த்தல்கள் பூர்த்தி செய்வற்கு ஆரம்பமாக இணங்கிய அலகின் அளவினை விட உள்ளபடியான அலகின் அளவு குறைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br>ஒப்பந்தகாரர் இணங்கி இருந்த ஒவ்வொரு வேலை விடயங்களிலும் பூர்த்தி செய்யப்பட்ட உள்ளபடியான அலகு அளவுகளுக்கு இடையே 5 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவாக வேலைப் பகுதி பூரத்தி செய்யப்பட்டதுடன் விடயம் 4 இற்கு உரிய வேலைப் பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் செய்கின்றமையினால் தேவையின் அடிப்படையில் அளவுகளில் மாற்றங்கள் மற்றும் முரண்கள் ஏற்பட முடியும். மேலும் இது அளவிடும் (Measure & Pay) ஒப்பந்தம் ஆகும். | சரியான மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் வேலை விடயங்களில் அலகின் அளவு மேற்கொள்வதற்கும் சகல வேலை விடயங்களையும் பூர்த்தி செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1 (அ) மற்றும் (ஆ) இன பிரகாரம் இடைக்காலக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளின் பணிகளிற்காக வேலைகளை அமுல்படுத்துதல், பொருள் வழங்குதல் அல்லது சேவை வழங்குதல் போதியளவான பிரகாரம் மேற்பார்வை செய்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் விடயங்களுக்காக அதிகார சபையில் தகைமை உத்தியோகத்தரின் மேற்பார்வை இன்றி இந்த பழுது பார்த்தல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்குரிய சகல வளங்கள் மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை பரீட்சித்தல் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு புறம்பான நிர்வாக உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்தது. | தகைமை பெற்ற உத்தியோகத்தரிடம் இருந்து மேற்பார்வை நடவடிக்கைகள் மூலம் வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (viii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் வேலைகளுக்கான மாதிரிகள் இணங்கியிருந்த ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேலைகள் நிறைவேற்ற வேண்டியிருந்தமை மற்றும் உறுதிப்படுத்திக் கொடுப்பனவு செய்தல், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்கி இருக்க வேண்டியிருந்தமை உறுதிப்படுத்தி வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் ஒன்று பொறியிலாளர்/ ஆலோசனையாளரால் விநியோகிக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அவ்வாறான உறுதிப்படுத்தல் ஒன்று இந்தப் பழுதுபார்த்தலுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேலைப் பூர்த்தி சான்றிதழ் விநியோகித்தல், குறைபாடுகளைச் சரிசெய்யும் கால எல்லையில் (Defects Liability Period) முடிவடைந்த பின்னரே விநியோகிக்கப்படுகின்றது. | வேலைப் பூர்த்தி சான்றிதழ் இந்தப் பழுது பார்தலுக்காக பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள ‘‘சௌசிறிபாய’’ கட்டிடத்தின் பெயரிப்பட்ட சுவர்களின் ஓரங்கள் / பீம் / தூண்களின் கருமை | வர்ணப் பூச்சுக்களைக் கொள்வனவு செய்யும் போது வழங்கப்பட்ட சந்தையில் கடனுக்கு (Credit) பெற்றுக் | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை |

நிறங்களை அகற்றி நிறம் பூசுவதற்காக தேவையான வர்ணப் பூச்சுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (ஆ) இன் பிரகாரம் குறித்துரைத்த நியமத்திலும், மாதிரியில், விதிகளுக்கு, பிரமாணங்களுக்கு மற்றும் நல்லாளுகைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல், 1.2.1 (இ) இன் பிரகாரம் தகைமை பெற்ற ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினருக்கு பெறுகைகளில் பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் ஆகக் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்குதல், 1.2.1 (ஊ) இன் பிரகாரம் மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவு செய்யும் பணி நடைமுறைகள் வெளிப்படையாகவும் உள்ளபடியாகவும் உறுதிப்படுத்துதல் மற்றும் 1.2.1 (எ) இன் பிரகாரம் கேள்வி தாரரால் வழங்கப்படுகின்ற தகவல்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாத்தல் போன்ற பெறுகை செயற்பாடுகளின் மூலம் உறுதிப்படுத்த வேண்டிய அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மற்றும் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.4 இன் பிரகாரம் பெறுகை மூல தத்துவங்களை நிறைவேற்றும் வகையில் அதிகார சபையினால் இந்த நிறப்பூச்சுக்களை மேற்கொள்வதற்காக தேவையான நிறப் பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நிறம் பூசும் நடவடிக்கைகளுக்குரிய பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கொள்ளாமையினால் இது மிகவும் அவசரமாக இருந்தமையால் இதற்காக கடனுக்கு வழங்கக் கூடிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி அதன் பிரகாரம் (Hand Quotation) நேரடியாக கூறு விலைகள் பெறப்பட்டிருந்தது.

நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

### 3.3 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் கைநூலின் 3.5 மற்றும் 6.8 ஆம் பிரிவுகளுக்கு முரணாக அதிகார சபைக்குச் சொந்தமான இலக்கம் 65-7300 என்ற வாகனம் 2023 யூலை 20 ஆந் திகதி முதல் சாரதியுடன் அமைச்சின் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் சாரதியின் சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்ட பணம் அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக அதிகார சபையின் கேட்போர் கூட செயற்படுத்துனர் பதவியின் ஊழியர் 2007 மே மாதம் முதல் அமைச்சின் ஊடகப் பிரிவுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம், படிகள், மேலதிக நேரப் படிகளை மீண்டும் அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. | சாரதியின் பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் மற்றும் மேலதிக நேரப் படிகள் அதிகார சபைக்கு மீளளிப்புச் செய்யுமாறு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கேட்போர்கூட பயிற்சியாளரை மீண்டும் இந்த அதிகார சபைக்கு விடுவிக்குமாறு 1/4/107-VI (886) என்ற 2020.08.28 மற்றும் 2020.12.15 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் வரிசை அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலாக அந்த வரிசை அமைச்சின் செயலாளரின் இலக்கம் 2/1/7A/826 (ii) மற்றும் 2021.03.30 ஆந் திகதிய கடிதம் மூலம் அவரை மீண்டும் எமது நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு வசதியீனமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையால் 57-9385 என்ற ஜீப் வண்டி 2023 ஒக்தோபர் 08 ஆந் திகதி முதல் நவம்பர் 05 ஆந் திகதி வரை அமைச்சரின் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டமையின் மூலம் ரூபா 110,268 தொகை | கௌரவ இராஜாங்க அமைச்சரால் CIDA நிறுவனத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்ட எழுத்து மூல கோரிக்கையின் பிரகாரம் அதிகார சபையின் தலைவரால் | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்களை ஏனைய தரப்பினருக்கு விடுவிக்க முடியாதிருத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| எரிபொருளுக்காகவும், ரூபா 17,830 மேலதிக நேரத்திற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. இந்த செலவினங்களை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த வாகனத்தை விடுவிப்பதற்காக உரிய அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த வாகனம் விடுவிக்கப்பட்டிருந்தது. |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையின் மனிதவள முகாமைத்துவத்தில் குறிப்பாகக் காணப்படுகின்ற பிரச்சனையான நிலைமை காணப்பட்டதன் காரணமான உத்தியோகத்தர்களை சேவையில் இருந்து நீக்குதல், கட்டாய விடுமுறையில் அனுப்புதல், கேட்டு விலகுதல், அதிகார சபைக்கு எதிராக வழக்கு தொடர்தல், இழப்பீடு செலுத்தியதன் காரணமாக சட்ட செலவினம் ரூபா 7.78 மில்லியன் வரை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகரித்திருந்தது. மேலும் முன்னாள் நிதிப் பணிப்பாளரால் முன்னாள் தலைவருக்கு எதிராக தனிப்பட்ட ரீதியில் தொடரப்பட்ட வழக்கு (DMR/3067/2022 என்ற வழக்கு) இற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ரூபா 0.33 மில்லியன் சட்டத்தரணி கட்டணம் இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு அதிகார சபைக்கு தொடர்பாக இல்லாதிருந்த தனிப்பட்ட வழக்கு நடவடிக்கையாக இருந்தமையால் நிதிப்பிரமானம் 156(i) (அ), (ஆ) மற்றும் (7) பிரிவுகளின் பிரகாரம் இந்த பணத்தை உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட இழப்பீட்டு வழக்கிற்கு உரியதாக அதிகார சபையால் செலவிடப்பட்ட செலவினம் தொடர்பாக 2024.05.29 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் போது கிடைக்கின்ற பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான அதிகார சபையின் வருடாந்த அறிக்கை தற்போது இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கை இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | 2022 இன் வருடாந்த அறிக்கை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக வரிசை அமைச்சினால் அனுப்பப்பட்டதுடன் 2023 இன் வருடாந்த அறிக்கை தயாரித்து முகாமைத்துவ சபை அங்கீகாரத்திற்காக 2024 மே மாதம் 29 ஆந் திகதி நடைபெற்ற அந்தக் கூட்டத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த திகதியில் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய செயல் முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது பின்வரும் ஒவ்வொரு பணிகளினதும் செயல் முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. அதாவது ஆதன அபிவிருத்தியாளர்களைப் பதிவு செய்தல், கட்டிடப் பொருட்கள் வழங்குனரைப் பதிவு செய்தல், தகைமை பெற்ற நபர்களைப் பதிவு செய்தல், பிணக்குகளை தீர்த்தல் தொடர்பான பயிற்சி பாட நெறிகளை நடாத்துதல், பசுமை கட்டிட வழங்குனர்களைப் பதிவு செய்தல், வேலைத் தள மேற்பார்வையாளர்கள் மற்றும் மத்திய மட்டத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களைப் பதிவு செய்தல் போன்றவை ஆகும். மேலும் வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல், தொழில் நுட்ப கணக்காய்வை மேற்கொள்ளல், சகல மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களின் மூலம் அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துதல், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட தரவு முறைமையில் | ஆதனங்கள் அபிவிருத்தி செய்பவர்க்காக உரிய வர்த்தமானிப் பத்திரம் 2020.05.25 ஆந் திகதிய இலக்கம் 2181/21 விநியோகிக்கப்பட்டுள்ளது. பதிவு கட்டாயமாக்குவதற்கான சட்ட வழங்கலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. பசுமை கட்டிடப் பொருட்கள் தரமிடல் நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய வழிகாட்டி, விண்ணப்பப் பத்திரம் போன்றவை தயாரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்யும் நிகழ்சித் திட்டம் 2018.08.23 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 2085/19 என்ற வர்த்தமானியின் பிரகாரம் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திறன் பயிலுனர்களைப் பதிவு செய்தல்ஈ மேற்பார்வை மட்டத்தில் முகாமையாளர் மற்றும் தொழில் ரீதியான மட்டத்தில் ஏனைய உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல், நிர்மான உபகரணங்களைப் பராமரித்தல், செயற்பாட்டு தொழில் நுட்பம் தொடர்பான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், நிர்மான உபகரணங்கள் தொடர்பாக இளைஞர்களைப் பயிற்றுவித்தல் போன்ற பணிகளின் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

வருமான மூலப் பொருட்களைப் பதிவு செய்யும் நலனாளிகள் தொடர்பாக அறிவுறுத்துதல், உள்ளடக்கும் செயற்பாடுகளின் வெளிப்படையான தன்மைகளைப் பரிசீலித்தல், சாதகமான இலகுவான பதிவு செய்தல் விண்ணப்பப் பத்திரங்களை வழங்குதல், பதிவு செய்தல் தொடர்பான வழிகாட்டியை அச்சிடுதல், அடிப்படை மூலப்பொருள் நிரல் ஒன்றைத் தயாரித்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.